1991, சனவரி 24]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது மற்றும் ஐம்பத்தி ஆறாவது (ஒன்பதாவது பேரவை) அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அறிவிப்புகள்.

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990—91 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1990—91 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிந்துள்ளது குறித்து ஆளுநர் அவர்களிடம் இருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

MESSAGE.

"In pursuance of Article 203, clause 3, of the Constitution of India, I, Surjit Sing Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further Grants for the year of 1990-91"

6. இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990—91 பொது விவாதமும் அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990—91 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22—1—1991 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கூறப்பெற்றுள்ள தொகைக்கு மேற்படாத தொகைகள் 1990—91 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

11-10 மணி

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர் வட்டம், கீவளூர் நகரத்தில்